பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 14 | ஞாயிற்றுக்கிழமை | 01.10.2023 | அதிர்வு 61

## தண்ணீர்த்தொட்டியில் வீழ்ந்து குழந்தை சாவு!

### கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி – செல்வாநகர் பகுதியில் தண்ணீர்த்தொட்டியில் குழந்தையொன்று வீழ்ந்து உயிரிழந்துள்ளது.

ஒரு வயதும் மூன்று மாதங்களும் நிறைவடைந்த பெண் குழந்தையே 04

# தடையை மீறி விகாரைக் கட்டுமானம் திருமலையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

திருகோணமலை இலுப்பைக் குளத்தில் தடை செய்யப்பட்ட பகுதியில் விகாரை அமைக்கப்பட்டுவரும் கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரையின் கட்டுமானப் பணிகளுக்கு அங்குள்ள மக்கள் எதிர்ப்பு தெரிவித்துவந்த நிலையில், இந்தப் பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநரினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், கடந்த 04

# குருந்தூர்மலை விவகாரத்துக்கு சுமுகமான தீர்வு



## முன்னாள் சபாநாயகர் கரு மகிழ்ச்சி

– எஸ்.நிதர்ஷன் –

**“நாட்டில் மீண்டும் இரத்தக்களறி ஏற்படும் தறுவாயில் இருந்த குருந்தூர்மலை விவகாரத்தில் நாங்கள் தலையிட்டு தற்போது சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது.”**

**- இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.** 02

# முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகல் அடக்குமுறையின் புது அத்தியாயமே

## இலங்கையில் இனி நீதியை எதிர்பார்க்கவே முடியாது வெளிநாட்டிலிருந்து கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

– எஸ்.நிதர்ஷன்–

“முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவினுடைய பதவி விலகலும் அவர் நாட்டை விட்டு வெளியேறிய விடயமும் உண்மையிலையே இலங்கையினுடைய அடக்குமுறையின் ஒரு புது அங்கத்தை வெளிப்படுத்தி இருக்கின்றது.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே 04



# நீதிபதியின் வெளியேற்றம் குறித்து வெளிப்படை விசாரணை அவசியம்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



பொருளாதாரத்தைச் சீரழித்த அரசு தற்போது நீதித்துறையையும் சீரழித்து வருகின்றது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி விசனம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றம் தொடர்பில் வெளிப்படையான விசாரணைகள் தேவை என்றும் அக்கட்சி 02




தொண்ணூறுகளின் பிற்பகுதியில் யாழ். குடா நாடு அரச படைகளின் கட்டுப்பாட்டில் மீள வந்த பின்னர் விடுதலைப் புலிகள் புங்குடுதீவில் நிலை கொண்டபடி யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிவில் நிர்வாகத்தைக் குழப்பி வந்தனர். அதன் ஒரு கட்டமாக நீதிமன்றங்களையும் தங்கள் மிரட்டல்களினால் அவர்கள் செயலிழக்கச் செய்திருந்தனர்.

அது தொடர்பில் அச்சமயம் 03

# உடனடித் தேர்தலை கோருகிறார் மஹிந்த

தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம். இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் நிச்சயம் வெற்றி பெறுவோம். நாட்டு மக்களின் அரசியல் தீர்மானத்தை அறிய அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய வளங்களை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரரை நேற்று சனிக்கிழமை கொழும்பில் சந்தித்து உரையாடியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:–

நாட்டு மக்கள் பாரிய நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டு வாழ்க்கை சுமை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அரசாங்கத்துடன் பேச்சில் ஈடுபடுவேன். மக்களுக்கு ஏதாவதொரு வழிமுறையில் நிவாரணம் வழங்க வேண்டும்.

தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம். இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் நிச்சயம் வெற்றி பெறுவோம். நாட்டு மக்களின் அரசியல் தீர்மானத்தை அறிய அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை தொடர்ந்து பிற்போடுவது ஆரோக்கியமானதல்ல.

பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை முன்னிலைப்படுத்தி முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன என வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது. தலைமைத்துவத்தில் மாற்றம்



ஏற்படலாம். அதில் பிரச்சினையில்லை.

தேசிய தேர்தல்களை இலக்காக கொண்டு இனி நாடளாவிய ரீதியில் செயற்பாட்டு ரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். – என்றார்.

# மக்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் கோரிக்கை

இணைய வழி பாதுகாப்பு சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஊடாக பொதுமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்ய வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அரசு இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் தொழில்நுட்பத்துறையினர், சிவில் சமூகத்தினர் மற்றும் பல தரப்பட்ட நிபுணர்களின் கருத்தை உள்வாங்குவது அவசியம் என்றும் அமெரிக்கத் தூதுவர் தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை சர்வதேச தரம் மற்றும் ஏனைய ஜனநாயக நாடுகளின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப, திருத்தியமைக்க, இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுமாறும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.



## நீதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:–

“மக்கள் எழுச்சியின் பின்னர் பதவியேற்ற அரசு பொருளாதார ரீதியில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதாக பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருந்தது. தற்போது அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதகான முயற்சிகளை எடுத்து வருகின்றது.

அதற்காகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் ஆகியவற்றை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், சரியான திட்டமிடல்கள் இல்லாது எடுக்கப்பட்ட தீர்மானங்களால் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்செய்ய முடியாது சீர்குலைத்துள்ள நிலையில் தற்போது நீதித்துறையையும் சீர்ழிக்க ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, நீதிபதிகளை நாடாளுமன்றத்துக்கு வரவழைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தி அச்சுறுத்தலைவிடுத்துள்ளதோடு, நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம் ஆகியவற்றின் ஊடாக சுயாதீன நீதித்துறையை கேள்விக்குட்படுத்தி வருகின்றது.

இவ்வாறான நிலையில், தற்போது முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பணியாற்றிய நீதிபதி தனக்கு உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். ஆகவே, அவரின் வெளியேற்றம் சம்பந்தமாகவும், அவருக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களை வழங்கிய தரப்புக்கள் தொடர்பிலும் உண்மையான விடயங்களைகே கண்டறிவதற்கான வெளிப்படைத்தன்மையான விசாரணைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்.” – என்றார்.

## குருந்தூர்மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். ஊடக அமையத்தில் அவர் நடத்திய ஊடக சந்திப்பின்போது குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“குருந்தூர்மலை விவகாரத்தில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் இன, மத ரீதியான முரண்பாடு தோற்றம் பெற்றிருந்தது. அந்த முரண்பாடு மேலும் மேலும் வலுத்து நாட்டில் மீண்டும் இரத்தக்களறி ஏற்படும் நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆனால், தற்போது இந்த நிலைமையை நாங்கள் தலையிட்டு தடுத்து நிறுத்தியுள்ளோம்.

குறிப்பாக குருந்தூர்மலையில் மத ஸ்தலங்கள் அமைப்பதிலும் அவை யாருக்குச் சொந்தம் என்பதிலும் இன ரீதியான சர்ச்சை ஏற்பட்டிருந்தது. இதனால் இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் நாடாளுமன்றக் குழுவுக்குச் சில வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி எவ்வாறு இதனைத் தீர்த்து வைப்பது என்பது சம்பந்தமான ஒரு அறிக்கையை வழங்கியிருந்தோம்.

அந்த விடயம் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டு பலரும் இணங்கியதான ஒரு தீர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஆனாலும் அது தொல்பொருள் சார்ந்தது என்பதால் அது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மற்றும் களனி பல்கலைக்கழக துறைசார்ந்த நிபுணர்கள் தற்போது அங்கு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இது சம்பந்தமான வரலாற்றை அவர்களே தீர்த்து வைக்கும் வகையில் அவர்களிடமே இந்த விடயம் விடப்பட்டுள்ளது.

தற்போது அங்குள்ள 04▶

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்குப் படைகளின் தளபதியாகப் பலாலியில் நிலை கொண்டு கடமையாற்றி வந்த ஜெனரல் லயனல் பலகல்ல (பின்னாளில் இராணுவத் தளபதி) தந்த செய்தியோடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த புங்குடுதீவுப் பகுதிக்குப் புறப்பட்டேன் என்று நேற்று இப்பத்தியில் சுட்டியிருந்தேன் அல்லவா?

வடக்குப் படைத் தளபதி வழங்கிய விசேட அனுமதிக் கடிதத்துடன் யாழ்ப்பாணத்தில் எமது பத்திரிகை அலுவலகத்தில் இருந்து செய்தியாளர் ஞானசுந்தரம் குகநாதனுடன் (பின்னாளில் பத்திரிகையின் செய்தி ஆசிரியர். அலுவலகத்திற்கு அருகில் வைத்துக் கடுமையாக தாக்கப்பட்டு, தலையில் படுகாயம் அடைந்த நிலையில் இப்போது சுவிஸில் தஞ்சம் புகுந்து இருப்பவர்) புறப்பட்டேன்.

காலை 8 மணிக்கு நானும் குகநாதனும் எனது மோட்டார் சைக்கிளில் புறப்பட்டோம். பண்ணைப் பாலத்தடியிலேயே எமக்கு ஆச்சரியம் காத்திருந்தது. வழமையாக அந்த இடத்தில் உள்ள படையினரின் சோதனைத் தடை நிலையைத் தாண்டும் போது நோண்டி நுங்கெடுப்பார்கள். அன்று எதுவும் நடக்கவில்லை. எங்கள் மோட்டார் சைக்கிளைக் கண்டவுடனேயே 'சல்யூட்' அடிக்காத குறையாகத் தடைநிலைக் கதவைத் திறந்து விட்டு மரியாதை செய்தார்கள். ஜெனரல் பலகல்லவின் அறிவுறுத்தல் வழியில் இருந்த படையினரின் சகல தடை நிலைகளுக்கும் முற்கூட்டியே சரியாக வழங்கப்பட்டிருந்தது போலும்.

வழியில் வேலணைக்குச் சமீபமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தினோம். குகநாதனுக்கு வெற்றிலை வாங்குவதற்காகத்தான். அச்சமயம் அருகில் நின்ற ஒருவரிடம் கதை கொடுத்ததன் மூலம் விபரீதமான ஒரு தகவல் தெரியவந்தது. புங்குடுதீவை ஒட்டிய எல்லைப் பகுதியில் படைத்தரப்புக்கும் புலிகளுக்கும் இடையில் அன்று விடிகாலையில் பெரும் மோதல் இடம்பெற்றது என்றும் அதனால் வழியில் படையினர் மிகச் சூடாக இருக்கின்றனர் என்றும், அவர்களின் கெடுபிடி தீவிரமாக உள்ளது என்றும் அப்பகுதி சிவிலியன்கள் கூறினர். ஆனால் மேலிடத்து அனுமதிக் கடிதத்துடனும், ஏற்கனவே சம்பந்தப்பட்ட தடைநிலைகளுக்கு மேலிடம் விடுத்த அறிவுறுத்தல் முன்னேற்பாட்டுடனும் வந்த எங்களுக்கு வழியில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

படையினரின் கடைசி எல்லையைத் தாண்டி, புங்குடுதீவுக்குள் நுழைந்தபோது அங்கும் புலிகள் தரப்பும் அதிகாலையில் நடந்த மோதலின் தொடர்ச்சியாக பதற்றத்துடனும் ஒருவிதத் தீவிரக் கெடுபிடியுடனும் இருந்ததை அவதானிக்க முடிந்தது. எங்களைக் கண்டதும் தூயவன் தலையில் கையை வைத்தார்.

"எப்படி அண்ணை இந்தப் பிரச்சினைகளைத் தாண்டி வந்தனீங்கள்...? உங்களிடம் தீவக அடையாள அட்டை உள்ளதா...? எப்படி உங்களை வரவிட்டார்கள்...?" – என்றெல்லாம் ஆச்சரியத்துடன் கேட்டார் அவர்.

நான் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்த விசேட அனுமதிக் கடிதத்தைக் காட்டினேன். அதில் வடக்குப் பகுதிக் கட்டளைத் தளபதிக்காக அவரது அலுவலர் ஒப்பமிட்டிருந்தமையைச் சுட்டிக்காட்டி மேலிடத்து அங்கீகாரத்துடனும் அனுமதியுடனுமே வந்திருக்கிறோம் என்றேன்.

எமது பத்திரிகைப் பிரச்சினையைப் பேசி முடித்த பின்னர் மற்றைய விடயத்துக்கு நான் வந்தேன்.

"நீதிமன்றத்தையாவது நீங்கள் தலையிடாமல் சுயமாக இயங்கவிடவேண்டும், இல்லையேல் மக்களுக்குப் பிரச்சினைதான்" – என்றேன் நான். அப்படி நான் குறிப் பிட்டதுமே அவர் தீயை மிதித்தவர் போல் துள்ளிப்பாய்ந்தார்.

"அண்ணை அது மேலிடத்து சமாச்சாரம். வன்னியிலை எடுத்த முடிவு. அதை நாங்கள் ஏதும் மாற்ற ஏலாது. எனது கையிலை ஒண்டுமில்லை"–என்றார் அவர்.

"எனக்கு அது தெரியும் தம்பி. இதைப் பற்றி தமிழ்ச்செல்வனோட பேசி ஒரு முடிவு எடுக்கவேணும் எண்ட தீர்மானத்தோடதான் நாங்கள் இண்டைக்கு வந்திருக்கிறம், மக்களின்ரை பிரச்சினையை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்" – என்று தொடங்கி, ஜெனரல் பலகல்லவுடன் நான் பேசிய விடயங்கள் வரை எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறினேன். எனதுபேச்சுதூயவனிடம்நன்குஎடுபடுகின்றது என்பது அதனை அவர் கூர்ந்து உள்வாங்குவதிலிருந்து புரிந்தது.

"எங்களிலையும் சிலபேருக்கு இந்தக் கருத்து உள்ளது. ஆனால் மேலிடத்துக்கு யார் சொல்லிறது எண்டதுதான் பிரச்சினை. இப்ப உங்களின்ரை பெயரிலை இதைப் போட்டுப் பார்ப்பம் அண்ணன். இருங்கோ கதைத்துவிட்டு வருகிறேன்"– என்று அவர் புறப்பட்டார்.

சற்றுத் தொலைவில் உள்ள ஓரிடத்தில் அவர்களின் தொலைத் தொடர்பாடலுக்கான 'செட்' இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். பேசிவிட்டு வந்தார். தமிழ்ச்செல்வன் ஏற்கனவே எடுத்த முடிவில் விடாப்பிடியாக இருக்கிறார் என்றும் அதை மாற்றுவது கஷ்டம் என்றும் என்னிடம் கூறும்படி தெரிவித்தார் என்றும் தூயவன் வந்து சொன்னார்.

நானும் விடவில்லை. பதில் விவாதத்தைத் தொடர்ந்து முன்வைத்தேன். எனது தொல்லை தாங்கமுடியாமல் தூயவன் மீண்டும் தொலைத்தொடர்பாடல் கருவி இருக்கும் பக்கமாகப் போனார். தமிழ்ச்செல்வனுடன் பேசிவிட்டு வந்தார்.

இப்படியே காலை 10 மணியளவில் தொடங்கிய வாதப்பிரதிவாதம் பிற்பகல் 1 மணி வரை நீடித்தது. எங்களிடமும், பின்னர் சற்றுத் தொலைவில் இருந்த தொலைத்தொடர்பாடல் கருவி அமைந்த பகுதிக்கும் இடையில் என்று இப்படி மாறி மாறி அலைந்தார் தூயவன். கடைசியாக ஒரு முடிவுடன் வந்தார்.

வித்தியண்ணை கூறிய விடயங்கள் குறித்துத் தலைவருடன் பேசுவதற்குத் தாம் செல்கின்றார் என்றும், அதுவரை வித்தியண்ணையை அங்கு நிற்கச் சொல்லுங்கள் என்றும் தமிழ்ச்செல்வன் தகவல் தந்திருக்கின்றார் என்றார் தூயவன்.

நானும் குகநாதனும் காத்திருந்தோம். சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் தூயவன் திரும்பி வந்தார். எங்களுக்கிடையிலான தொடர்பாடலில் சிக்கிக் களைத்துப் போயிருந்த தூயவன் இம்முறை புன்சிரிப்புடன் வந்தார்.

"அண்ணை வெண்டு போட்டியள்.... களத்திலை இருக்கின்ற உங்கள் மாதிரி ஆட்களுக்குத்தான் நிலைமை சரியாக விளங்கும் எண்டும், அதாலை உங்கடை கோரிக்கையைச் சாதகமாகப் பார்த்து முடிவெடுக்கும்படியும் தலைவர், தமிழ்ச்செல்வன் அண்ணைக்குச் சொல்லிப் போட்டார் போலை.... ஆனால் நீதிமன்றங்களை இயங்க விடுறதிலை தமிழ்ச்செல்வன் அண்ணைக்கு முழு விருப்பம் இல்லை.... 'வித்தியண்ணையை என்ன சவம் எண்டாலும் செய்து துலைக்கட்டாம்' எண்ட வசனத்தோடைதான் அனுமதி தந்தவர். அதிலையும் சில விஷயங்களைச் சொல்லச் சொன்னவர்...."– என்றார் தூயவன்.

எனக்கு அப்பாடா என்றிருந்தது.

யாழ்.நீதிமன்றங்களில் படையினருக்கு எதிராகத் தொடுக்கப்படும் எந்த வழக்குகளிலும் படையினருக்காக யாழ். சட்டத்தரணிகள் ஆஜராகக்கூடாது என்பது உட்பட சில நிபந்தனைகளைப் புலிகள் விதித்தனர் என்பது எனது நினைவு.

அந்த நிபந்தனைகள் ஏதும் பெரிய விடயமாக எனக்குத் தெரியவில்லை. அவற்றை எல்லாம் சிக்கலின்றிப் பார்த்துக் கொள்வது எமது பொறுப்பு என்றேன் தூயவனிடம்.

"அப்படி எண்டால் அண்ணே நீதிமன்றங்கள் இனி இயங்கலாம் என்ற அறிவிப்புக் கடிதம் ஒன்றைத் தந்துவிடுகிறேன். இப்பவந்திருக்கின்றநீதிபதியிட்டைகுடுத்துவிடுறீங்களோ அண்ணை....?" என்று கேட்டார் தூயவன்.

"என்ன தம்பி பகிடியே விடுறீங்கள்.... அது எங்கடை வேலையே..? நீதிமன்றங்கள் செயற்படக்கூடாது எண்ட கடிதங்களை முன்னம் எப்படி அங்கை அனுப்பினீங்களோ அது மாதிரி இப்பவும் அனுப்புங்கோ" என்றேன் நான்.

பிற்பகல் 3 மணியளவில் புறப்பட்டோம். வழியில் திரும்பும் போதும் படை தடைநிலைகளில் எந்தத் தடங்கலும் இருக்கவில்லை. அதே இராஜமரியாதை.

அலுவலகத்துக்குப் போகாமல் வீட்டுக்குத் திரும்பினேன் – மதிய உணவு அருந்துவதற்காக. நான் வீட்டை அடைந்ததும் வீட்டுத் தொலைபேசி அடித்தது. ஜெனரல் பலகல்லதான் எடுத்தார்.

"இப்போதுதான் திரும்பி வந்து சேர்ந்தேன்"– என்றேன்.

"எனக்குத் தெரியும்". – என்றார் அவர். தமது சோதனைத் தடை நிலையம் மூலம் எனது பயண அசைவை அவர் கண்காணித்திருப்பார் என்று தோன்றியது.

"உங்கள் கோரிக்கை தொடர்பில் பச்சை சமிக்ஞை கிடைத்துவிட்டது. நீதிமன்றங்கள் இனி இயங்கலாம்"– என்றேன்.

"நல்லது மகனே. நாளை இங்கு (பலாலிக்கு) வாருங்கள். நேரில் விரிவாகப் பேசுவோம். இப்போதைக்கு நீங்கள் பாதுகாப்பாகத் திரும்பி வருகின்றமைதான் எனக்கு முக்கியமானது. நீங்கள் வந்துவிட்டீர்கள். நாளை மிச்சம் பேசுவோம்"– என்றார் அவர்.

நான் அன்று மாலையே அப்போது யாழ். நீதிவானாக நியமனம் பெற்றும் செயற்படச் சிக்கலான நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருந்த நீதிவான் இ.த. விக்னராஜாவிடம் எமது பிரதம செய்தியாளர் குகநாதனை அனுப்பினேன். நீதிமன்றச் செயற்பாட்டுக்கு விதித்திருந்த தடையை எங்கள் முயற்சியால் நீக்குவதற்குப் புலிகள் இசைந்துவிட்டனர் என்ற தகவலை அவருக்குத் தெரியப்படுத்தினேன். உரிய கடிதம் அடுத்த நாள் அவர் கைக்குக் கிடைக்கும் என்ற தகவலையும் தெரிவிக்கச் செய்தேன்.

அடுத்தநாள் பலாலியில் ஜெனரல் பலகல்லவைச் சந்தித்து நீதிமன்றங்கள் சுமுகமாக இயங்கக்கூடிய நிலைமை வந்துள்ளமை பற்றி எடுத்துரைத்தேன். அவர் எமது பத்திரிகையின் பொறுப்பான பணி இது எனப் பாராட்டினார்.

அதற்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்கள் சுமுகமாக இயங்கத் தொடங்கின. அதன் பின் ஓரிரண்டு வழக்குகளைத் தவிர பிற வழக்கு விடயங்கள் எவற்றிலும் புலிகள் தலையீடு செய்யவே இல்லை என்பதையும் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் என்னால் மதிப்பீடு செய்ய முடிந்தது.

அந்த வழக்குகள் கூட நேரடியாகப் புலிகளுடன் சம்பந்தப்பட்டவையல்ல.

ஒரு வழக்கு சமய நிறுவனம் ஒன்றின் தலைமை மேய்ப்பர் நியமனம் பற்றிய சர்ச்சை. அதில் கூட புலிகள் நேரடியாகத் தலையிடவில்லை. தீர்ப்பு வழங்கு

(4ஆம் பக்கம் பார்க்க..)

# பொரலஸ்கமுவவில் பெண்ணின் சடலம்!

பொரலஸ்கமுவவில் பெல்லன்வில – மஹரகம வீதி பாலத்துக்கு அருகில் உள்ள கால்வாயில் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலஸ்கமுவவில் வசிக்கும் திருமணமான பெண்ணான மோனிகா நாம (வயது 62) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கால்வாய் அருகில் அவரது தோள் பை ஒன்றும், தேசிய அடையாள அட்டை திருடப்பட்டதாக முறைப்பாடு செய்த பற்றுச்சீட்டும், பழைய ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

நுகேகொட பதில் நீதிவான் திஸ்ஸ விஜேரத்ன சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டதுடன், சடலத்தை களுபோவில பிரேத அறையில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

## இரகசியம் பரகசியம்....

(3ஆம் பக்கத் பக்கத் தொடர்ச்சி..)

வதை ஓரிரு மாதங்கள் தள்ளிப் போடும்படி வன்னியில் இருந்து ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டதாக அறிந்தேன். அவ்வளவே. மற்ற வழக்கு என்ன என்பதை மறந்து விட்டேன்.

ஆனால் அரசு தரப்புடன் இயங்கிய குழுக்களின் சார்பில் சில தலையீடுகள் தொடர்ந்து இருந்தன என அறிந்திருந்தேன். சாம்பிளுக்கு ஒன்று.

அச்சமயம் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு சில தினங்களுக்கு முன்னர் பிரசாரத்துக்குச் சென்ற தமிழ்த் தேசிய தரப்பு ஒன்றின் வாகன அணி வழி மறைக்கப்பட்டு தாக்கப்பட்டது. தாக்குதலில் கட்சி ஆதரவாளர்கள் இருவர் கொல்லப்பட்டனர். 18 பேர் படுகாயமடைந்தனர். இதனை ஒட்டி அரசு தரப்புடன் இயங்கிய கட்சியின் ஒரு கையாள் கைது செய்யப்பட்டார். கொலைக் குற்றம். ஆனால் அவருக்கு யாழ் கீழ்நிலை நீதிமன்றம் அன்று மாலையே பிணை வழங்கியது.

அச்சமயம் சட்டமா அதிபராக இருந்தவர் கமலசபேசன். என் ஊர்க்காரர். எனது தந்தையின் நெருங்கிய நண்பர். சட்டக் கல்லூரியில் நான் பயின்ற காலத்தில் அரச சட்டத்தரணியாக இருந்த அவர் தான் எனது கார்டியன். சட்டக் கல்லூரியில் எனது சட்ட விரிவுரையாளரும் கூட. என் மீது அளவற்ற வாஞ்சையும் பரிவும் கவனிப்பும் கொண்டவர்.

அவர் இறக்கும் வரை அவருடன் தொலைபேசியில் அடிக்கடி உரையாடுவேன். சட்டத்துறை தொடர்பான செய்திகளை கொழும்புத் தேசிய ஊடகங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நான் வெளியிடும் சூட்சுமம் பலருக்கும் அப்போது புரியவில்லை.

கொலைக் குற்றச் சந்தேக நபர் ஒருவருக்கு கீழ்நிலை நீதிமன்றம் பிணை கொடுக்க முடியாத நிலையில், கைதான அன்றே பிரதான சந்தேக நபருக்குப் பிணை வழங்கப்பட்டமை சட்டமா அதிபர் கமலசபேசனைக் கடும் சீற்றத்தில். ஆழ்த்தியிருந்தது. அந்த நீதிவானைத் திட்டுவதற்கு தொலைபேசியில் அவர் பயன்படுத்திய வார்த்தையை நான் எழுத விரும்பவில்லை.

அந்தக் கொலைக் குற்ற சந்தேக நபர் உட்பட மூவருக்கு யாழ் மேல் நீதிமன்றம் பின்னர் இரட்டைக் கொலைக்காக இரட்டை மரண தண்டனையும், மேலதிகமாக 18 பேரைக் காயப்படுத்தியமைக்காக 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தது. கைதான அன்றே பிணை அனுமதி வழங்கப்பட்ட அந்த பிரதான குற்றவாளி அப்போதே டிமிக்கி கொடுத்துக் கம்பி நீட்டி விட்டார். இப்போது வெளிநாட்டில். இன்னமும் தண்டனைத் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவர் சுதந்திரமாகத் திரிகின்றார்.

தமக்கு அதிகாரமே இல்லாத விடயத்தில் அத்தகைய பிணை அனுமதியை கீழ்நிலை நீதிவான் விடுத்தமைக்கு கட்சியின் அரசியல் தலையீடு காரணம் என்று மனதுக்குள் குமுறிக் கொண்டிருந்தார் அன்றைய சட்டமா அதிபர்.

இதுதான் நமது நீதித்துறை மீதான அரசியல் அதிகாரத்தின் முறையற்ற செல்வாக்கின் சீத்துவம்...!

## முல்லைத்தீவு நீதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இதுவரைக்கும் இலங்கை ஆட்சியாளர்கள் தாங்கள் ஜனநாயகத்தைப் பேணுகின்ற ஒரு நாடாகவும், சட்டத்தின் ஆட்சியையும் நல்லாட்சியையும் கடைப்பிடிக்கின்ற ஒரு நாடாகவும் உலகுக்குக் காட்டிக் கொண்டு வந்திருந்தனர். ஆனால், நீதிபதி சரவணராஜாவுடைய பாதிப்பு இந்தக் கபட நாடகத்தை முற்று முழுதாக அம்பலப்படுத்துகின்றது. அத்தோடு இலங்கையில் தொடர்ந்தும் ஒரு சிங்கள பௌத்தத்தின் இனவாதப் போக்கு தவிர்ந்த வேறு எந்தவொரு செயற்பாட்டுக்கும் இடமே கிடையாது. நீதித்துறை உட்பட அந்தச் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு முற்றுமுழுதாக அடிபணிந்து செயற்படுகின்ற அதைக் கடைப்பிடிக்கின்றபாதுகாக்கின்ற ஒரு துறையாக அமைந்துள்ளது.

ஆகவே, தமிழர்களுக்கு அல்லது முஸ்லிம்களுக்கு அல்லது சிங்கள பௌத்தம் அல்லாத சிங்கள பௌத்தர்களின் நலன்கள் இல்லாத வேறு எந்தவொரு தரப்புக்கும் இலங்கையின் ஊடாக ஒரு நீதியை நியாயத்தைத் தேட முடியாது என்ற விடயம் இந்த நீதிபதிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பின் ஊடாக நிரூபிக்கப்பட்டும் இருக்கின்றது.

அந்தவகையில் இவருக்கு எதிராக அல்லது இவரைக் குறிவைத்து தீர்க்கப்படுகின்றபோது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அவர் உறுதியாகவும் துணிந்து நீதிக்காகவும் எடுத்த முடிவுகளுக்கு அவருக்குப் பாராட்டு தெரிவிக்கின்ற அதேசமயம் அவருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற மோசமான இனவாதச் செயற்பாடுகள், அச்சுறுத்தல்கள் அடிபணிய வைக்கக் கூடிய முயற்சிகள் போன்ற அனைத்தையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்தோடு நானும் எங்களுடைய செயலாளர் கஜேந்திரனும் தற்போது ஜெனிவாவிலும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் நீதிபதியுடைய இந்தச் சம்பவத்தை நாங்கள் இங்கு பதிவு செய்து கொண்டு வருகின்றோம்.

எம்மைப் பொறுத்தவரையில் இது கண்துடைப்புக்கான செயற்பாடாகத்தான் சர்வதேச சமூகமும் பார்க்கும் என்ற ஒரு கருத்தை நாங்கள் வைத்திருக்கின்றோம்." – என்றார்.

## தண்ணீர்த்தொட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு உயிரிழந்துள்ளது என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தக்குழந்தை மற்றுமொரு குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது வீட்டின் அருகில் உள்ள தண்ணீர்த் தொட்டியில் தவறி வீழ்ந்து சாவடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## தடையை மீறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திங்கட்கிழமை முதல் அந்தப் பகுதியில் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதனைத் தடை செய்யக் கோரியும், திருகோணமலை மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலுப்பைக்குளம் மற்றும் அதனை சூழவுள்ள கிராமங்களில் காலாகாலமாக தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## குருந்தூர்மலை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விகாரையில் இருந்த பௌத்த மதகுருவும் அங்கிருந்து முழுமையாக விலகிவிட்டார். தொல்பொருளுக்குரிய இடமாக அந்தப் பிரதேசம் காணப்படுவதால் தற்போது தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலே அந்த இடம் இருக்கின்றது.

இந்தத் திணைக்களத்தினர் ஒருபுறம் ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற அதே நேரத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் அந்தக் காணிக்கு வெளியே இரு தரப்புக்கும் தலா ஒவ்வொரு ஏக்கர் காணி வழங்கப்பட்டு பொலநறுவை மற்றும் கண்டி இராசதானியில் உள்ளது போன்று அவரவர்கள் தங்கள் தங்கள் மதத் தலங்களை அமைத்து வழிபட முடியும்.

ஆனாலும் குறிப்பிட்ட பகுதியில் விகாரை அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் வழிபாடுகளும் கூட நிறுத்தப்பட்டுள்ள அதேவேளையில் பௌத்த பிக்குவும் அங்கிருந்து வெளியேறிவிட்டார். இந்தநிலையில் ஆராய்ச்சிகளைத் தவிர எந்தவொரு தரப்பும் அங்கு ஆலயங்களை அமைக்கவோ, வழிபாடுகளை மேற்கொள்ளவோ, வேறு எதனையுமோ செய்ய முடியாது.

ஆகையினால் இனிமேல் அவரவர்களுக்கு வழங்கப்படுகிற ஒவ்வொரு ஏக்கர் காணிகளில் அவரவர்கள் தங்கள் தங்கள் வணக்கஸ்தலங்களை அமைத்து வழிபட முடியும். இதனால் தற்போது அதில் யாரும் பிரச்சினைபடத் தேவையில்லை. எனினும், ஒரு காலத்தில் இதற்கு நிரந்தர தீர்வு கிடைக்கலாம்." – என்றார்.

# தங்க நகைகளைக் களவெடுத்த விமான நிலைய அதிகாரி கைது

வெளிநாடு செல்வதற்காக வருகை தந்த பெண்ணொருவரின் தங்க நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான சேவை பாதுகாப்பு பிரிவில் ஸ்கேனிங் இயந்திரத்தைப் பரிசோதனை செய்யும் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 29 வயதுடைய ஹீனடியன பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், வெளிநாடு செல்ல விமான நிலையம் வருகை தந்த பெண்ணிடமிருந்து தங்கச் செயின்மற்றும்பெண்டன்என்பனவற்றைத் திருடினார் என்று செய்யப்பட்ட முறைப்



பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, சந்தேகநபரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், திருடப்பட்டதாகக் கூறப்படும் தங்கச் செயினை நகைக் கடை ஒன்றில் விற்பனை செய்துள்ளதாக சந்தேகநபர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்த போது சந்தேகநபர் விற்பனை செய்ததாகக் கூறப்படும் தங்க மாலை விற்பனை செய்த பின்னர் அது உருக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும், குறித்த பெண்ணிடம் இருந்து திருடிய பெண்டன் மற்றும் இன்னுமொரு பெண்ணின் கைப்பையில் இருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் சிறிய அளவிலான தங்க மோதிரங்கள் என்பனவும் மற்றுமொரு நகைக் கடையொன்றில் அடகு வைக்கப்பட்டிருப்பதும் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வளர்ப்பு நாயைத் தாக்கிய

# கடை உரிமையாளர் மீது பொலிஸ் சாரதி தாக்குதல்

தனது வளர்ப்பு நாயைத் தாக்கிய கடையொன்றின் உரிமையாளரைப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்கியுள்ள சம்பவம் அக்போபுர பகுதியில் இடம்பெற்றுள்ளது.

67வயதுடையகடைஉரிமையாளரைத் தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தரான சாரதியை சந்தேகத்தின் பேரில் ஹபரணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தளை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் சாரதியாகக் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான கடையின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஹபரணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போதைப்பொருள் வாங்க யாசகத்தில் ஈடுபட்ட தாய்

ஹொரணையில் உள்ள பிரதான வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களுக்கு முன்பாகக் குழந்தையுடன் யாசகத்தில் ஈடுபட்டு, அதனூடாகக் கிடைக்கும் பணத்தைப் போதைப்பொருள் வாங்கப் பயன்படுத்தினார் எனக் கூறப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண், பண பரிவர்த்தனைக்காக ஏ.ரி.எம். இயந்திரங்களுக்கு வரும் நபர்களிடம் பணம் வசூலித்து போதைப் பொருள் கொள்வனவு செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர், பொல்கஸ்ஓவிட்ட – பஹலமாகம பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் ஆவார்.

அந்தப் பெண் பத்து மாதங்களுக்கு முன்னர் பொல்கஸ்ஓவிட்ட பிரதேசத்தில் உள்ள அழகூட்டல் நிலையமொன்றில் பணி புரிந்துள்ளார் எனவும், பணிபுரியும் காலத்தில் போதைப்பொருளுக்கு அடிமையாகியிருந்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# கறுவாத் தோட்டத்திலிருந்து பெண்ணொருவரின் சடலம்

நெலுவ, பன்னிமுல்ல பகுதியில் உள்ள கறுவாத் தோட்டத்திலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறுசடலமாகமீட்கப்பட்டவர்70வயதுடைய பெண் எனத் தெரியவந்துள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட அந்தப் பெண் மனநலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 23 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி நேற்று கறுவாத் தோட்டம் ஒன்றிலிருந்து அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெலுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீரசேகரவின் வாயைக் கட்டுப்படுத்த தவறியமையால் வந்த வினையாம் இது!

## இப்படிக் கூறுகின்றார் தம்பிராசா

நாட்டின் உயரிய சபையான நாடாளுமன்றத்தில் முன்னாள் கடற்படை அதிகாரி சரத் வீரசேகர உயர்ந்த நீதிதுறையின் நீதிபதி தொடர்பாக விமர்சித்த நிலையில், அதற்கு ஜனாதிபதியோ, பாதுகாப்புத் துறை சார்ந்தவர்களோ, சட்டமா அதிபர் திணைக்களமோ நடவடிக்கை எடுக்காததே முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா நாட்டை விட்டு தப்பிச் செல்லக் காரணமென அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

1983ஆம் ஆண்டு இனப்படுகொலை சிங்கள அரசின் அமைச்சராக இருந்தவர்தான் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆனால் இதுவரை யாருக்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நாடு தமிழர்கள் வாழ முடியாத நாடு.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வெவ்வேறு வழக்குகளில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பிரதிவாதியாக உள்ளார் எனச்நீதியமைச்சர் விஜயதாராஜபக்ஷ குறிப்பிட்டார். அது தவறு. நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக எந்தவித தனிப்பட்ட குற்றச்சாட்டும் கிடையாது. அவ்வாறு இருந்தால் அவர் நீதிபதியாக இருக்க முடியாது.

குருந்தூர்மலையில் ஆதிசிவன் மலை தொடர்பான வழக்கில் நீதி வழங்கினார். நீதிபதி தமிழர் என்பதால் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்.

ஊடகங்களை சுதந்திரமாக இயங்கவிடமால் செய்ய அரசு பயங்கரவாத சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கிறது.

ஊடகங்களையும் ஊடகவியலாளர்




களையும் தகவல்களை வெளிக் கொண்டு வருவதை அச்சுறுத்த ஜனாதிபதி உள்ளிட்ட அரசு முயற்சிக்கிறது.

நீதிபதி நீதியை வழங்கியபோதும் பொலிஸ் திணைக்களம் அதனை நடைமுறைப்படுத்த தவறியிருக்கிறது – என்றார்.

# நீதித்துறையைப் பாதுகாக்க வேண்டிய முழுப்பொறுப்பு ஜனாதிபதியினுடையது

## நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



(எஸ்.சதீஸ்)

நீதிதுறையில் ஊழல், முறைகேடுகள் காணப்படுகின்றமையினாலேயே நீதிபதி ஒருவர் இன்று பதவி விலகியிருக்கிறார். நாட்டின் நீதித்துறையை ப் பாதுகாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு – கடமை – நாட்டின் ஜனாதிபதிக்கு உள்ளது. அதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும்.

– மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும்

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை ஹட்டனில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரவித்தார்.

இதன் போது அவர் மேலும்கூறியவை வருமாறு:-

சம்பந்தப்பட்ட நீதிபதி எந்தக் காரணத்திற்காகப் பதவி விலகினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இருந்தாலும், நீதித்துறையில் இது ஒரு பாரிய வீழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

முன்னோர்கள் பல ஆவணங்களைப் பாதுகாத்து விட்டுச் சென்ற காரணத்தினால்தான் அதைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். மலையக மக்கள் இலங்கைக்கு வந்து இரு நூறு வருடங்கள் கடந்துள்ள நிலையில் அவர்கள் கடந்து வந்த பாதையை மையப்படுத்தி கணபதிபிள்ளை ஒரு நூலை எழுதியிருக்கிறார்.

இலங்கை நாட்டை பற்றி ஓர் அடையாளத்தை வெளிப்படுத்தியது – இந்த நாட்டை ஒட்டிப் பிரபல்யமாகப் பேசப்பட்டது – 'சீலோன் ரீ'. இலங்கைத் தேயிலையை அடையாளபடுத்தியது என்பது எமது நாட்டை

அடையாளபடுத்தியதாகக் கூறப்படுகிறது. அந்தத் தேயிலையை உருவாக்கிய மக்களின் நிலை 200 வருடங்கள் கடந்தும் எவ்வித முன்னேற்றமும் இல்லை .

அதற்கு பிறகு இலங்கை நாட்டை அடையாளப்படுத்தியது 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் வெற்றி. போட்டியில் சிறந்த அணி இலங்கை எனப் பெயர் சூடியது.

தற்பொழுது சிறந்த வங்குரோத்து நாடாக நமது நாடு விளங்குகிறது.

ஐந்து லட்சமாக இருந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை தற்பொழுது ஒரு லட்சத்து 37ஆயிரம் தொழிலாளர்கள் மாத்திரம் என்றளவுக்குக் குறைந்து விட்டது.

தொழிற்சங்கத்தில் ஈடுபடுகிறார்கள். போராட்டங்கள் அனைத்தும் தோட்டப் புறங்களில் இன்று மழுங்கடிக்கப்பட்டிருக்கின்றன. இறுதியாகப் பாரிய போராட்டமென்றால் ஹட்டன் மல்லியப்பு சந்தியில் சம்பள உயர்விற்காக நடத்தப்பட்ட போராட்டமே. அதுவே இறுதியாகும்.

நவீன அடிமைகளைக் கையிலே போட்டுக் கொண்டு தங்களுடைய காரியங்களைச் சாதித்துக் கொள்வதுதான் இந்தத் தொழிற்சங்கங்களின் நடவடிக்கையாக இருக்கிறது.

எதிர்காலத்தில் எமது தொழிற் சங்கங்களை நாம் வலுவடையச் செய்ய வேண்டும்.

நாட்டில் இன்று பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. நாட்டினுடைய நிலைமை மிக மோசமாகப் போய் கொண்டிருக்கிறது. இந்நிலையில் பொருளாதாரப் பின்னடைவுகளை மறைப்பதற்காக பல சட்டங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன. – எனக் குறிப்பிட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முதியோரைக் கனம் பண்ணுவோம்!

இன்று சர்வதேச முதியோர் தினம். ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், 1991 முதல், ஒவ்வோர் ஆண்டும், ஒக்டோபர், முதலாம் திகதி உலக முதியோர் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

முதியோரை மதித்தல், அவர்களுக்கு மரியாதை செலுத்தி கௌரவம் பண்ணுதல் போன்றவை, இந்த நாளின் பிரதான நோக்கங்களாகும். முதியோருக்கு உணவு, உறைவிடம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சமூகம் மற்றும் சட்ட ரீதியிலான பாதுகாப்பு அளித்தல், மனித உரிமை மற்றும் அடிப்படை சுதந்திரத்தை முதியோர் அனுபவிக்க வழி வகை செய்தல் போன்றவை, முதியோர் நலனுக்காக, ஐக்கிய நாடுகள் சபை வரையறுத்துள்ள விதிமுறைகள்.

சக்கரம் போன்றது வாழ்க்கை. பிறக்கும் போது, சக்கரம் சுழல ஆரம்பிக்கிறது என்றால், அந்த சக்கரம், முழுச்சுற்று சுற்றி வரும் போது, மனிதனின் ஆயுள் காலம் முடிவடைகிறது.

காலச் சக்கர சுழற்சிக்குள், பச்சிளம் பாலகன், சிறுவன், வாலிபன், நடுத்தர வயதினன், முதியவன் எனப் பல வேஷங்களை, பல விதமாக நாம் ஒவ்வொருவரும் தரிக்க வேண்டியுள்ளது.

இதில், முதுமைப் பருவம்தான் மிகவும் கொடியது. ஆண்டு, அனுபவித்து, ஓய்ந்த காலத்தில், உற்ற துணை யாருமின்றி, மனதில் பட்டதை சொல்ல முடியாமல், நினைத்தபடி செயல்பட முடியாத நிலையில், முதியோருக்கு இயற்கையே, கை, கால்களில் விலங்கு போடும் காலம் இது.

உலக வாழ்வுக்கு விடை கொடுக்க - தன் வாழ்வின் உயிர்ப்பை முடிவுக்குக் கொண்டு வர - இல்லாமைக்குள் தன்னை நிரந்தரமாகப் புதைத்துக் கொள்ள - மனிதன் தன்னைத் தயார்ப்படுத்தும் காலம்தான் முதியோர் வாழ்வு.

ஆரோக்கியம், பணம், பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் உதவி ஒத்தாசை தேவைப்படும் மிக முக்கிய வேளை, இந்த முதுமை காலமே.

உலகம் முழுவதும், இளம் தலைமுறையினரால் - இளம் வயது குடும்ப உறுப்பினர்களால் - முதியோர் புறக்கணிக்கப்பட்டு, உதாசீனப்படுத்தப்பட்டு, நிர்க்கதி நிலையில் அந்தரிக்கும் இக்கட்டுச் சூழலில், வாழ்வின் அந்தத்தில் இருக்கும் அவர்களுக்கு, கௌரவமான - திருப்தியான - அமைதியான - நிம்மதியான பூரணத்துவத்தை இறப்புவரை வழங்கச் செய்யும் முயற்சியின் அடையாளமே இந்த முதியோர் தின அனுஷ்டிப்பு.

ஒவ்வொரு முதியவரும், தமக்குள் கொண்டிருக்கும் ஆற்றல், அனுபவம், அன்பு இவற்றின் தொகுப்பாக விளங்குகிறார்கள். இந்த மதிப்புமிக்க பெரியோர்கள் தேசத்தின் சொத்துக்கள். அவர்களை உதாசீனப்படுத்துவதும், ஒதுக்கி வைப்பதும் தேச வளர்ச்சியை - விருத்தியை - பாதிக்கும் செயல்.

இன்று நாம் அனுபவிப்பவை அனைத்தும் நேற்றைய தலைமுறையினரின் உழைப்பின் பலன்தான். நம்மைக் காட்டிலும் முதியவர்கள் எவ்விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்லர். சொல்லப் போனால், நமது இன்றைய மேம்பட்ட நிலைக்கு அவர்களே பிதாமகர்கள்.

காலந்தோறும் கூடி வாழ்ந்த குடும்பம் என்ற அமைப்பு மனிதனை உயர்த்தி இருக்கிறது. அதற்காக நாம் மூத்தோருக்கு நன்றிக் கடன் செலுத்தும் நாள் இதுதான்...!

## பொலிஸ் உத்தியோகஸ்தர் மர்மமான முறையில் மரணம்

பொலன்னறுவை வெலிகந்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் அவர் தங்கியிருந்த அறையில் சந்தேகத்திற்குரிய வகையில் நேற்று முன்தினம் இர்வு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகந்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இலக்கம் 25, பிரதான வீதி ஏறாவூர் 2, வாழைச்சேனை என்ற முகவரியை சேர்ந்த மஹாமுல் மொஹமது ஹனீபா என்ற பொலிஸ் உத்தியோகஸ்தரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் வெள்ளி இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தார் எனவும், பணி முடிந்து அறைக்குச் சென்று உறங்கிய போது இந்த மரணம் ஏற்பட்டுள்ளதாகவும் வெலிகந்தை பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் மற்றும் பிரேதப் பரிசோதனைகள் என்பன நேற்று நடைபெற்றுள்ளன.

## 15 வயது சிறுமியைக் கர்ப்பமாக்கிய 18 வயது காதலன் விளக்கமறியலில்!

### மட்டக்களப்பில் நடந்த சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் 15 வயதுச் சிறுமியைக் கர்ப்பமாக்கிய 18 வயதுடைய காதலனை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு பதில் நீதிவான் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

மட்டு. தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள 15 வயதும் 9 மாதம் கொண்ட சிறுமிக்கு ஏற்பட்ட வயிற்றுவலி காரணமாக அவரை அவரது பெற்றோர் வைத்தியசாலையில் 28 ஆம் திகதி வியாழக்கிழமை சேர்த்தனர். இதன்போது ஆரம்பப் பரிசோதனை செய்த வைத்தியர்கள் அவர் கர்ப்பம் தரித்துள்ளமையைக் கண்டறிந்தனர்.

அந்தச் சிறுமி அதே பிரதேசத்தைச் சேர்ந்த கராஜ் ஒன்றில் வேலை செய்துவரும் 18 வயதுடைய காதலனுடன் ஏற்பட்ட தொடர்பினால் கர்ப்பமாகியுள்ளார் என்பது பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அந்த இளைஞனை நேற்று முன்தினம் 29 ஆம் திகதி கைது செய்த பொலிஸார் அவரை மட்டக்களப்பு பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவரை 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

### சீரற்ற காலநிலையால்

## பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை உயர்வு



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 164 குடும்பங்களைச் சேர்ந்த 644 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நேற்றைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 151 குடும்பங்களைச் சேர்ந்த 594 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வெள்ளப்பெருக்கால் 60 குடும்பங்களைச் சேர்ந்த 232 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 36 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. எனினும், இதுவரை காயங்களோ, உயிரிழப்புகளோ எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# சிறுவர்களும் முதியோரும் சமூகத்தின் இரு கண்கள்!



## இன்று சர்வதேச சிறுவர் முதியோர் தினம்

### சர்வதே சிறுவர் தினம்

சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கிலும் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்குடனும் அவர்களுக்கென்று ஒரு தினமும் வகுக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது. அதுதான் சர்வதேச சிறுவர் தினமாகிய ஒக்டோபர் 1 ஆம் திகதியாகும்.

1954ஆம் ஆண்டில் சிறுவர் தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை ஐ.நா. வலியுறுத்தியது. 18 வயதுக்குக் குறைந்த சகலரும் சிறுவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி சர்வதேச ரீதியில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட சிறுவர் உரிமை பிரகடனத்தில் 1991 ஆம் ஆண்டு இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றிலொரு பகுதியினர் சிறுவர்களாக காணப்படுகின்றனர் எனக் கூறப்படுகின்றது. சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களது கருத்துக்களுக்கு செவிசாய்க்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே சிறுவர் தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்களின் பங்கினை மறுப்பதற்கில்லை.

சிறுபராயம் என்பது ஒரு இனிமையானது. பெரியோர்களாகிய நாம் அனைவரும் கடந்து வந்த பருவமாகும். இதில் மகிழ்ச்சியடையாத மற்றும் தமது கடந்த கால சிறு பராயத்தை நினைத்து இனிமையாக அசைபோடாத எவரும் இருக்கமாட்டார்கள்.

எதிர்கால உலகின் தலைவர்களாகவும் இந்த உலகை காப்பதற்கு தயாராகும் பாதுகாவலர்களாகவும் இருப்பவர்கள் சிறுவர்கள் ஆகும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து எனும் வாக்கிற்கமைய சிறுவயதிலேயே சிறுவர்கள் வாழும் சூழல் அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகிறது.

உலகிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் உள்ள அடிப்படை உரிமைகள் சர்வதேச சிறுவர் தினமாகிய ஒக்ரோபர் முதலாம் திகதியே நினைவு கூரப்படுகின்றன. சர்வதேச ரீதியில் சிறுவர்களுக்குரிய உரிமைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளவை பின்வருமாறு அமைகின்றன.

வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை, பிறப்பின்போது பெயரொன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக்கொள்ளும் உரிமை, பெற்றோரைத் தெரிந்துகொள்வதற்கும் அவர்களது பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை, பெற்றோரிடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்தப்படாதிருப்பதற்கான உரிமை, கருத்தை வெளிப்படுத்தும் உரிமை, சிந்திப்பதற்கும் மனச்சாட்சிப்படி நடப்பதற்கும் சமயமொன்றை பின்பற்றுவதற்குமான உரிமை, சமூக உரிமைஇ தனியுரிமைஇ சுகாதார வசதிகள் பெறும் உரிமை, போதிய கல்வியைப்பெறும் உரிமை, பொருளாதார சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கும் உரிமை, பாலியல் வல்லுறவுகளிலிருந்து பாதுகாக்கும் உரிமை, சித்திரவதை – குரூரமாக நடத்துதல் போன்ற தண்டனைகளிலிருந்து தவிர்த்துக்கொள்ளும் உரிமை, சாதாரண வழக்கு விசாரணைக்குள்ள உரிமை, சுதந்திரத்துக்கும் பாதுகாப்பிற்குமான உரிமை இவ்வாறு பல்வேறு உரிமைகள் சிறுவர் உரிமை தொடர்பில் பட்டியலிடப்பட்டுள்ளன.

சிறுவர் பராயமானது கள்ளங்கபடமற்ற மகிழ்ச்சியானதும் கற்றறிந்து கொள்ளும் பருவமாகவும் கொள்ளப்படுகிறது. ஆகவேதான், சிறுவர்கள் கட்டாயம் பாடசாலை சென்று கல்வி கற்க வேண்டும். 1997 ஆம் ஆண்டில் முதலாம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பெற்றோர் 5 வயதிலிருந்து தமது பிள்ளையை ஒரு பாடசாலைக்கு கிரமமாக சென்று

(12 ஆம் பக்கம் பார்க்க)




# கல்விப் பணியில் நூற்றாண்டு! கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

ஆயிரமாயிரம் ஆசிரியர்களை உருவாக்கி நாட்டுக்களித்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலை தனது கல்விப் பணியின் நூற்றாண்டை இன்று ஞாயிற்றுக்கிழமை (01.10.2023) நிறைவு செய்கின்றது.

இதனையொட்டிய விசேட நிகழ்வு இன்று கலாசாலையில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல். இளங்கோவனைப் பிரதம விருந்தினராகக் கொண்டு நடைபெறுகின்றது. அத்தோடு ஆய்வரங்கு ,

நூற்றாண்டுப் பவனி என்பனவும் எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ளன. நூற்றாண்டு விழாவின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. நூற்றாண்டு நினைவு முத்திரை வெளியீடு, நூற்றாண்டு மலர் வெளியீடு என்பன நடைபெறும்.

அன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்வியமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த கலந்துகொள்ளவுள்ளார். கல்வி வளர்ச்சியின் முதுகெலும்புகளான ஆசிரியர்களை உருவாக்கும் பணியில் பணியாற்றிவந்த கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு என்பது சமூக முக்கியத்துவமுடையதாகும். அது மட்டுமன்றி சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளமே கோப்பாய் ஆசிரிய கலாசாலை என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் கல்வியில் மிசனரிமாரின் செல்வாக்கே மேலோங்கியிருந்தது. மிசனரிமாரால் நடத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் கிறிஸ்தவர்களையே பயிற்சிக்காக உள்வாங்கிக்கொண்டன. ச.அருணாசலம் என்பவர் 1880களில், சைவ சமயத்தவராக இருந்து கொண்டே ஆசிரிய பயிற்சியைப் பெற விரும்பி முயற்சித்தாராயினும் அது சாத்தியமாக வில்லை. ச.அருணாசலம் பின்னாளில் நாவலர் வழியில் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்துடன் கல்வி வழங்குவதற்காகப் பணியாற்றியவர். அவர் சைவ சமயத்தவர்கள் பயிற்சி பெறத்தக்க கலாசாலையை நிறுவ முயன்றார். தனது ஊரான காரைநகரில் ஒரு சைவாசிரிய கலாசாலையை நிறுவினாராயினும் அதற்கு அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை. தொடர்ந்து கீரிமலை ஏரம்பர் மடத்திலும் பின்னர் வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஒரு பகுதியிலும் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் நிறுவப்பட்டு சில காலம் இயங்கின என்றாலும் பல்வேறு காரணங்களால் அவற்றாலும் அரச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

தனது முயற்சியில் தளராதவரான ச.அருணடசலம், கோப்பாயைச் சேர்ந்த சு. இராசரத்தினத்தினம் அவர்களின் (பின்னாட்களில் இந்துபோர்ட் இராசரத்தினம் என அறியப்பட்டவர்) தொடர்பால் கோப்பாயில் சைவாசிரிய கலாசாலையை நிறுவ முயன்றார். அதன் விளைவாக, சு.இராசரத்தினம், மு.சுவாமிநாதன் (இவரே கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலையின் ஸ்தாபகர்), டாக்டர் கி.சுப்பிரமணியம் ஆகியோரது உழைப்பால் கோப்பாய் நாவலடியில் 'ஐக்கிய போதனா ஆசிரிய கலாசாலை' 1916இல் இயங்கத் தொடங்கியது. எனினும் இடவசதிப் பற்றாக்குறையைக் காரணங்காட்டி அரச அங்கீகாரம் மறுக்கப்பட்டது.

பின்னர் சேர். பொன். இராமநாதன் இருபாலையிலிருந்த தனது நிலத்தின் (இந்து சர்வகலாசாலை அமைக்கும் நோக்கில் வைத்திருந்த சத்தியபாமாத் தோட்டத்தின்) ஒரு பகுதியை உபகரிக்க முன்வந்தமையைத் தொடர்ந்து, இன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை அமைந்துள்ள இடத்தில் சைவாசிரிய கலாசாலை செயற்படத் தொடங்கியது. அருணாசலம் அவர்களின் 'சைவாசிரிய கலாசாலை' என்ற கனவு, சு.இராசரத்தினம், மு.சுவாமிநாதன், டாக்டர் கி. சுப்பிர மணியம் ஆகியோரது உழைப்பாலும் சேர். பொன். இராமநாதனின் வண்மையாலும் மெய்ப்பட்டு உருவாகிய கலாசாலையே அரச அங்கீகாரம் பெற்று 'யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி' என்ற பெயரில் 01.10.1923 ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கியது.

இது தொடர்பாக செய்தி வெளியிட்ட இந்து சாதனம்(20.09.1923), "மிஷனரிமாரும் சைவர்களும் சேர்ந்து நடத்தி வந்த கோப்பாய் ஆசிரியர் வித்தியாசாலை வருகிற ஒக்ரோபர் மாதம் முதலாம்திகதி தொடக்கம் அரசினர் பொறுப்பில் எடுக்கப்பட்டு, யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி என்னும் பெயருடன் வழங்கிவரும்" எனக்குறிப்பிட்டது.

இக்கல்லூரி ஆண்களுக்கான கல்லூரியாகச் செயற்பட்டது. கல்லூரியின் முதலாவது அதிபராக அ. பொன்னையா பொறுப்பேற்றுக் கொண்டார்கள். 1947ஆம் ஆண்டு முதல் 'கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையாக மாறி பெண்களுக்கு மட்டும் பயிற்சியளித்தாலும் 1977ஆம் ஆண்டு முதல் இருபாலாருக்குமான கலாசாலையாகச் செயற்பட்டுவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் 1947இல் நிறுவப்பட்டு செயற்பட்டுவந்த பலாலி ஆசிரிய கலாசாலை 2012 ஆம் ஆண்டு நிரந்தரமாக மூடப்பட்டு, கோப்பாய் ஆசிரிய கலாசாலையுடன் இணைக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது இக்கலாசாலை வளாகத்திலேயே ஆகும். கல்விக் கல்லூரியைத் தன் குழந்தையாகத் தன் மடியில் தவழவிட்ட தாய் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை என்றால் மிகையில்லை.

பாரம்பரியமானதும் விசாலமானதுமான கட்டடத்தில் இயங்கி வரும் இக் கலாசாலை பார்வையாளர் அரங்குடன் கூடிய மைதானத்தைக் கொண்டுள்ளது. ஆசிரிய மாணவர்களின் வழிபாட்டிற்காகக் கலாசாலை வளாகத்தில் அமைந்திருந்த யோக மண்டபம் 2014ஆம் ஆண்டில் ஆலயமாக பரிமாணம்பெற்றுள்ளது. அன்னை மரியாள் சிற்றாலயமும் கலாசாலை வளாகத்தில் உள்ளது.

1971 இல் அமைக்கப்பட்ட 'கிருஷ்ணை படிப்பகம்' கலாசாலையின் நூலகமாக ஏழாயிரத்துக்கும் அதிகமான நூல்களுடன் பயன்பட்டுவருகின்றது. கலைகளை வளர்க்கும் மையமாக இரதிலக்சுமி மண்டபம் செயற்பட்டுவருகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர்களும் முதியோரும்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி கற்பதற்கு ஒழுங்குகள் செய் தல் கடமையாகும்.

சிறுவர்களுக்கெதிரான வன்முறை களாவன பின்வருமாறு நோக்கலாம்.

மோசமான வார்த்தைப் பிரயோ கத்தை அவர்களுக்கெதிராக பாவித்தல், சிறுவர்களை புறக்கணித்தல், சிறுவர் உழைப்பு, பாலியல் துஷ்பிரயோகம், யுத்தத்தினால் பாதிப்படைதல், விபச் சாரத்திற்கு அமர்த்துதல், சித்திரவதை, போதைப் பொருள் கடத்தலுக்காக இவர் களைப் பாவித்தல், இளவயதுத் திரு மணம், கடத்தல், கொலை.

உண்மையில் பிள்ளையின் வளர்ச் சியில் பெற்றோரின் பங்களிப்பானது மிகவும் முக்கியமான ஒன்றாகும். 'இன்றைய சிறுவர்களே நாளைய தலை வர்கள்' இந்த வாசகத்தின்படி ஒரு நாட் டின் சிறுவர்கள் மதிக்கப்பட வேண்டும்.

'மகத்துவம் மிக்கதோர்சிறுவர்கள் சமுதாயத்தை உருவாக்குவோம்'

## சர்வதேச முதியோர் தினம்

முதியவர்கள் என்பது இந்த நாட்டின் முதுசங்கள். இவர்கள் சமூகத்தில் வேறு யாரும் அல்ல நமது இரத்த உறவு. நம்மை மனிதனாக செதுக்கிய சிற்பிகள். எம்மை பெற்று வளர்த்து ஆளாக்கியவர்க ளும் அவர்களே தான். எமக்காக வாழ் நாள்முழுவதும் மழை, வெயில்,பனி, காற்று என்று பாராது உழைத்து உழைத்து களைத்து போன உயிருள்ள ஜீவன்கள். அவர்களை பாதுகாப்பாக அன்பாக அரவணைக்க வேண்டியது எமது அனைவரினதும் பாரிய பொறுப் பாகும்.

மனிதாக பிறந்த அனைவரும் ஒரு நாள் முதுமையைச் சந்தித்தே ஆக வேண்டும். உலகில் மிகவும் அமைதியும் நிம்மதியுமாக வாழ வேண்டிய பருவம் முதுமைப்பருவமாகும். முதுமையை போற்றி பாராட்டி பாதுகாத்த காலம் மாறி



தற்போதய நவீன காலத்தில் குடும்பத் திற்கு பெரும் தலையிடியாக சுமையாக மாற்றி முதியோர் இல்லத்தில் ஒப்படைக் கும் நிலைக்கு அம் முதுமை தள்ளப்பட் டுள்ளது. முதுமையடைந்து ஒருவர் ஓய்வுபெறுகின்றார் என்றால் உண் மையிலேயே அவர் வயதால் முது மைபெற்றாலும் மனதால் இள மையா கவே இருப்பார் . அவரிடமிருந்து இளை யோர் பல அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நவீன வாழ்க்கை முறை ,நகரத்தை நோக்கிய நகர்வு, பொருளாதார காரணி கள் காரணமாக முதியவர்களை மிகவும் வெறுப்புணர்ச்சியுடன் நோக்குகின்றனர். இந்த வெறுப்பின் வெளிப்பாடுகளே முதியோர் இல்லங்கள் அதிகரிப்பதற்கும் பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர் கள் பிச்சைக்காரர்களாக வீதியோரங்களி லும் பேருந்துகளிலும் கையேந்துவதற் கும் காரணங்களாகின்றன. முதுமை என்பது நோயல்ல, அது மனிதன் மறு படியும் குழந்தையாகின்ற ஒரு பருவ மாகும். இதன் போது தனது பிள்ளை களிடமிருந்தும் சொந்த பந்தங்களிடமி ருந்தும் அன்பையும் அரவணைப்பையும் பாதுகாப்பையும் எதிர்பார்த்திருப்பார்கள். இவை கிடைக்காத பட்சத்தில் மன வேதனையுடன் சமூகத்திலிருந்து ஓர மாக ஒதுங்குகின்றனர்.

மனித வாழ்வில் அறுபது வயதை அடைவதை முதுமையின் ஆரம்பமாக கொள்ளலாம். ஆனால் இந்த வயதின் பின்னரும் பல முதியவர்கள் சாதனை புரிகின்றார்கள்.

வயதானவர்களின் அனுபவங்கள் இன்றைய இளைய தலைமுறையினரு க்கு அவசியமானவை. ஆனால் எம்மில் எத்தனை பேர் இதனை உணர்ந்திருக் கின்றனர்.

கடந்த நூற்றாண்டு நடுப்பகுதிவரை கூட்டு குடும்ப வாழ்வில் முதியவர்கள் போதியளவு கவனிக்கப்பட்டார்கள் . எதற்கெடுத்தாலும் முதியோரின் ஆலோ சனைகளையும் அனுபவத்தையும் பெற்றுக் கொள்வார்கள். தற்பேகாது அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

முதியவர்களுக்கு உணவு , உடை , இருப்பிடம் மற்றும் சுகாதார வசதிகள் கிடைக்கப் பெற வேண்டும். அவர்கள் சுதந்திரமாகவும் அழுத்தமின்றியும் வாழ்வதற்கான நிம்மதியான அமை தியான சூழல் உருவாக்கி கொடுக்க வேண்டும். முதியோர் கூறும் அறிவுரைக ளையும் ஆலோசனைகளையும் செவியுற்று அதற்கு மதிப்பளிக் வேண் டும். மனித உரிமை மற்றும் அடிப்படை சுதந்திரத்தை அவர்களும் அனுபவிக்க இடமளிக்க வேண்டும்.

முதியவர்களை பாதுகாப்பாக அன் பாக அரவணைக்க வேண்டியது எமது அனைவரினதும் பாரிய பொறுப் பாகும்.

# கல்விப் பணியில்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழைய விடுதிக் கட்டடம் சேதமடைந்த மையால் புதிதாக விசாலமான விடுதிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. நூ ற்றாண்டையொட்டி திறன் வகுப்பறை யொன்றும் கலாசாலையில் அமைக்கப் பட்டுள்ளது. கலாசாலையில் காலத்துக் குக் காலம் பல்வேறு மன்றங்கள் செயற்பட்டு வந்தாலும் முத்தமிழ் மன்றம், இந்து மன்றம், உடலாளர் மன்றம், நுண்கலை மன்றம், ஆங்கில மன்றம் என்பன நீண்ட பாரம்பரியத்துடன் செயலாற்றிவருகின்றன.

அருணா இல்லம், சுவர்ணா இல்லம், ராதா இல்லம், காவேரி இல்லம் ஆகிய இல்லங்களாக ஆசிரிய மாணவர்கள் பிரிந்து பல்வேறு போட்டிகளிலும் பங் கேற்றுவருகிறார்கள். ஆண்டுதோறும் வெளிவரும் 'கலைமலர்' கலாசாலை மாணவர்களது எழுத்தாற்றலை வெளிப் படுத்துகிறது. இந்த நூறு ஆண்டுகளில் ஆற்றலும் ஆளுமையும் சமூக மதிப்பு முடைய பல கல்வியாளர்கள் அதிபர்க ளாக, விரிவுரையாளர்களாகக் கடமை யாற்றியுள்ளார்கள். கடமையாற்றி வருகிறார்கள்.

நூற்றாண்டு நிறைக்கும் தருணத்தில் கலாசாலையின் அதிபராக செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் சிறப்புடன் செய லாற்றி வருகிறார். இவ்வாண்டில் கலா சாலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் விருத்திகளும் அதிபரின் ஆளுமைக்குச் சான்று பகர்வன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை தனது நூறாண்டுப் பயணத்தில், பல நூற்றுக்கணக்கான ஆற்றல்மிகு ஆசிரியர்களை உருவாக்கியுள்ளது. பல்துறை ஆற்றலாளர்களைக் கல்விச் சமூகத்துடன் இணைத்துள்ளது. அவர்கள் ஆசிரியர்களாக மட்டுமன்றி அதிபர்களாக, கல்வியதிகாரிகளாக, விரிவுரையாளர்களாக, நிர்வாகசேவை அதிகாரிகளாக உயர்ந்து பல நிலைகளி லும் பணியாற்றியுள்ளார்கள். பணி யாற்றிவருகிறார்கள்.

இலங்கையின் தமிழ் மொழி மூலக் கல்வி வளர்ச்சியில் கோப்பாய் ஆசிரியர் கலாசலையின் பங்கு நிராகரிக்க முடியாதது. அதுமட்டுமன்றி இசைக்கலை ஞர்களாக, நடனக்கலைஞர்களாக, பேச்சாளர்களாக, எழுத்தாளர்களாக எனப் பல்வேறு தளங்களிலும் கலா சாலையின் குழந்தைகள் முத்திரை பதித்துள்ளார்கள்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் குறிப்பாக தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் தடம்பதித்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டைக் கடந்து தலைநிமிர்ந்துள்ளது. இனிவருங் காலங்களிலும் கலாசாலை தனது நிகரற்ற பணியால் எமது கல்வி வளர்ச் சியில் பணியாற்றும் என நம்பலாம்.

**சிவகுருநாதன் கேசவன்,**
(பழைய மாணவன்)
விரிவுரையாளர்,
சியன தேசிய கல்விக் கல்லூரி.



# 60 ஆவது அகவையில் இன்று ஜனா...!

இன்று ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தனது அகவை அறுபதை எட்டும் நாடாளு மன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தனது அனுபவத் தொகுப்பான ஜனாவின் வாக்குமூலம் என்ற நூலை வெளியிடுகிறார்.

இந்த நூல் மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரது பிறந்த நாளில் பல அரசியல் மற்றும் சமூகப் பிரமுகர்கள் மத்தியில் வெளியிடப் படுகிறது.

தனது பதின்ம வயதில், இனத்தின் விடுதலைக்காக சகலவற்றையும் துறந்து உயிரைத் துச்சமாக எண்ணி ஆயுதப் போராட்டத்தை வரித்துக் கொண்டு ஒரு இளைஞன் புறப்படுகிறான். களத்திலே விழுப் புண்களை சுமக்கிறான். தனது கனவிலும் கொள் கையிலும் மாறாத நம்பிக்கையோடு போராட்டத்தில் ஈடுபடுகிறான்.

வீரமும் தீரமும் அர்ப்பணிப்பும் ஆயுத பலமும் இருந்தால் விடுதலையை காணலாம் என்ற கனவு நனவாகியதா? தன் வாழ்நாளில் சந்தித்த மாற்றங்கள் என்ன? பயணித்த பாதை சரியானதா? இலக்கை எட்ட முடிந்ததா? எதிர்கொண்ட சிக்கல்கள் முகம் கொடுத்த பிரச்சினைகள் என்ன? மாற்றங்களை ஏற்றுக் கொண்டாரா? அடைந்த பயன்கள் பெற்றெடுத்த வெற்றிகள் என்ன?

தேசம், தேசியம், போராட்டம், அதன் வடிவம், மாற்றம், தொடர்ச்சி என்ன பல விடயங்களை தொகுத்து இந்த நூலின் வடிவத்தில் ஜனா தந்திருக்கிறார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஆரம்பகால போராளியாக பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராக இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியாக ஒரு அரசியல் தலைவனாக அரசியல் வாழ்க்கையிலே இவ்வளவு காலமும் அவர் கடந்து வந்த பாதைகள் என்பவற்றின் அனுபவப் பகிர்வை வடித்து தந்துள்ளார்.

விடுதலைப் போராட்டத்தில் பயணித்த பலருக்கு எழுதுவதற்கு ஆக்க பூர்வமான வரலாறுகள் இல்லை. விடுதலைப் போராட்டத்தில் பயணிக்காத பலர் இன்று விடுதலை பற்றி பேசுகிறார்கள். இவர்களுக்கு மத்தியில் ஒரு சிறுவனாக தேசிய பயணத்தில் போராளியாக ஆரம்பித்து இன்று ஒரு அரசியல் தலைவனாக அகவை 60 தொடுகின்ற ஒருவரின் அனுபவப் பதிவில் அனைத்து தற்கால மற்றும் எதிர்கால தமிழ் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல விடயங்கள் புதைந்துள்ளன.

ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி அதில் பங்கு பற்றிய ஒருவருடைய நேரடி வாக்குமூலம் தரப்பட்டுள்ளது. செவி வழி கதைகளை கேட்டு போராளிகளையும் போராட்டத்தையும் விமர்சிக்கின்ற பலருக்கு இந்த வாக்குமூலம் தக்க பதிலாக அமையும் என்று கருதப்படுகிறது.

ஒரு போராட்டத்தின் இலக்கு, அதை அடைவதற்கு படுகின்ற துன்பங்கள், அதில் செல்வாக்குச் செலுத்துகின்ற உள்ளக வெளியக காரணிகள், அவற்றை கையாளும் திறமை, அத்திறமை இல்லாவிட்டால் இனம் படுகின்ற துன்பம் என்ற பல விடயங்களை இந்த வாக்குமூலம் புட்டுக்காட்டி உள்ளது.

வாழும் போராளியாக துணிச்சலோடு இந்த வாக்குமூலத்தை ஜனா பதிவு செய்துள்ளமை, தன்னுடைய சொந்த வாழ்க்கையை மாத்திரமல்ல தமிழ் இளைஞர்களின் குறிப்பாகப் போராளிகளின் வாழ்க்கையை படம் போல எடுத்துக் காட்டியுள்ளது.

இதைத் தனிப்பட்ட ஒரு ஜனாவின் வாக்குமூலமாக கருதாமல் ஒட்டுமொத்த தமிழ் இளைஞர்களும் அறிந்து கொள்ள வேண்டிய வரலாற்று ஆவணமாக படித்துப் பார்க்க வேண்டிய ஒரு முக்கிய புத்தகமாக பயன்படுத்தப்பட வேண்டும்.




**குருசுவாமி சுரேந்திரன்,**
பேச்சாளர்– ரெலோ,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

# புவியீர்ப்புக்கு அப்பால் பயணம்

## ஆதித்தயா விண்கலம் குறித்து இஸ்ரோ தகவல்

ஆதித்தயா எல்-1 விண்கலம் புவி ஈர்ப்பு மண்டலத்துக்கு வெளியே வெற்றி கரமாகப் பயணித்து வருகிறது என இஸ்ரோ அறிவித்துள்ளது.

ஆந்திர பிரதேச மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்திலிருந்து, ரொக்கெட் மூலம் ஆதித்தயா எல்-1 விண்கலம் கடந்த செப்ரெம்பர் 2ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

சூரியனுக்கு விண்கலன் அனுப்பும் திட்டம் இதுவரை இந்தியாவில் மேற் கொள்ளப்படவில்லை என்பதால் இது இந்தியாவுக்கே ஒரு புதிய முயற்சியாக வுள்ளது.

பூமியிலிருந்து சுமார் 15 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்தில், எல்-1 லெக் ரேஞ்சியன் புள்ளியைச் சுற்றி, ஆதித்யா எல்-1 நிலைநிறுத்தப்படவுள் ளது.




இந்தப் புள்ளியை விண்கலம் அடை வதற்கு சுமார் 125 நாட்களுக்கு மேல் ஆகும்.

இந்நிலையில், ஆதித்யா எல்-1 விண்கலம் இதுவரை 9.2 இலட்சம் கிலோமீற்றர் தூரத்தை வெற்றிகர மாகக் கடந்துள்ளது என இஸ்ரோ அறி வித்துள்ளது.

மேலும், இந்த விண்கலம் புவி ஈர்ப்பு மண்டலத்துக்கு வெளியே வெற்றி கரமாகப் பயணித்து வருகிறது எனவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.



# மலைப் பாலத்திலிருந்து கவிழ்ந்து பஸ் விபத்து

## எண்மர் சாவு ; பலர் படுகாயம்

## மேட்டுப்பாளையத்தில் கொடூரம்

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று குன்னூர் - மேட்டுப்பாளையம் பகுதியில் உள்ள மலைப்பாலத்திலிருந்து பள்ளத்துள் கவிழ்ந்ததில் எட்டுப் பேர் பலியாகியுள்ளனர். பலர் படுகாயமடைந்த னர்.

தென்காசியிலிருந்து 54 பயணிகளுடன் ஊட்டிக்குச் சென்ற சுற்றுலா பஸ், குன்னூர்-மேட்டுப்பாளையம் மலைப் பாதையின் மரப்பாலம் அருகே, சென்றுகொண்டிருந்த போது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்துள் கவிழ்ந்துள்ளது.

இதில் பயணம் செய்த பயணிகளில் இதுவரை எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர். 35க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த பயணிகள் மீட்கப் பட்டு சிகிச்சைக்காக கோவை அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பங் களுக்கு தலா 2 லட்சம் ரூபாவும் (இந்திய மதிப்பு) படுகாயமடைந்தோருக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும் காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பணித் துள்ளார்.

## ‘சித்தா’ பட விழாவில் கன்னடர்கள் கோஷம்

# சித்தார்த்திடம் மன்னிப்பு கோரிய பிரகாஷ்ராஜ்



‘சித்தா’ பட விளம்பர நிகழ்வில் கலந்துகொண்ட சித் தார்த்தை அங்கிருந்து வெளியேறச் செய்த செயலுக்காக கன்னடர்கள் சார்பில் தாம் மன்னிப்புக் கோருகிறார் என நடிகர் பிரகாஷ்ராஜ் தெரிவித்துள்ளார்.

நடிகர் சித்தார்த் நடித்துள்ள ‘சித்தா’ பட விளம்பர நிகழ்ச்சி அண்மையில் பெங்களூரில் நடந்தது. அதில் சித்தார்த் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்துக்கொண்டிருந்த போது கன்னட அமைப்பினர் திடீரென்று அங்கு வந்து மேடையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். பின்னர் சித்தார்த் அங்கிருந்து வெளியேறினார்.

இந்த சம்பவத்துக்காக சித்தார்த்திடம் நடிகர் பிரகாஷ்ராஜ் மன்னிப்புக் கேட்டுள்ளார். இதுகுறித்து பிரகாஷ்ராஜ் சமூக வலை தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“நீண்ட காலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிய அனைத்து அரசியல் கட்சிகளையும் அதற்குக் காரணமான தலைவர்களையும் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்காத எம்.பிக்களையும் கேள்வி கேட்காமல், சாமானிய மக்களையும், சித்தார்த் போன்ற கலைஞர்களையும் தொந்தரவு செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு கன்னடராக அனைத்துக் கன்னட மக்களின் சார்பாக சித்தார்த்திடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்” என்று கூறியுள்ளார்.”



### அமெரிக்க அரச செயற்பாடுகள்

# இன்றுடன் முடக்கம்?

## நிதியின்மையால் பேரபாயம்

பொதுப் பணிகளுக்குச் செலவிடுவதற்கான நிதியின்மையால் இன்று முதல் அமெரிக்க அரச செயற்பாடுகள் முடங்கும் அபாய நிலையை எட்டியுள்ளது.

அமெரிக்க அரச நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கான காலக்கெடுவை நேற்று (30) நள்ளிரவுடன் அமெரிக்க காங்கிரஸ் அவை இழக்கும் நிலையில் இருந்தது.

அமெரிக்க அரசிடம் பொதுப் பணிகளுக்காக செலவிடுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை நேற்றுடன் காலியாகியது.

புதிதாக நிதி அனுமதிக்கப்படாத நிலையில் பல்லாயிரக்கணக்கான அரச பணிகள், அலுவலகங்கள் இன்று (01) முதல் முடங்கும் அபாய நிலை அதிகரித்திருக்கின்றன.

இதற்குக் காரணம், நவம்பர் 17ஆம் திகதிவரை அரசுக்கு நிதி வழங்க வகை செய்யும் இடைக்கால மசோதாவை செனட் சபை அங்கீகரித்திருந்த போதிலும், குடியரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்திருந்தனர்.

இந்நிலையில், செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்குள் இடைக்கால மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க அந்நாட்டு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது என நாடாளுமன்றத் தலைவர் கெவின் மெக்கார்தி கூறியிருந்தார்.

ஒருவேளை, அந்த இடைக்கால மசோதாவுக்கு ஒப்புதல் கிடைக்காவிட்டால், அமெரிக்க அரசு முடங்கும் அபாயத்துடன், அது உலக அளவில் பொருளாதார சந்தைகளைப் பாதித்து, அதன் மூலம் பல்வேறு நாடுகளின் உள்நாட்டுச் சந்தைகளில் எதிரொலிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த கால வரலாற்றிலிருந்து பார்த்தால், அமெரிக்க அரசு, நிதிப்பற்றாக்குறையால் முடங்குவது இது நான்காவது முறையாக இருக்கும். ஒருவேளை, அமெரிக்க அரசு நிதியின்றி முடங்கினால், அந்நாட்டு அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாது, விமான சேவை முதல் பலவும் முடங்கும் நிலை ஏற்படும்.

அமெரிக்க அவையில், எதிர்க்கட்சியினரின் கை ஓங்கிவருவதன் எதிரொலியாக இந்தச் சிக்கல் எழுந்துள்ளது எனக் கூறப்படுகிறது. குடியரசுக் கட்சியினர் குறைந்த பெரும்பான்மையுடன்தான் அமெரிக்க அவையை கட்டுப்படுத்தி வருகிறார்கள், அதே வேளை, ஜனநாயகக் கட்சியினர் செனட் அவையை ஒரே ஒரு இருக்கையில் தங்கள் கையில் வைத்திருக்கிறார்கள்.

இதனால், அமெரிக்க அரசானது, செலவழிக்கும் அனைத்து தொகைக்குமான கணக்குகளை இரு தரப்பினரிடமிருந்தும் ஒப்புதல் வாங்க வேண்டும், அந்தக் கணக்குகளுக்கு இரு அவைகளிலிருந்தும் ஒப்புதல் பெற்றுத்தான் ஜனாதிபதி ஜோ பைடனின் ஒப்புதலுக்குச் செல்ல வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# "இம்ரான் யூதர்களின் முகவர்"

### தொலைக்காட்சியில் கடுமையாக விமர்சித்தவரை

### நேரலையில் வைத்துத் தாக்கிய இம்ரானின் சட்டத்தரணி

பாகிஸ்தான் தொலைக் காட்சி ஒன்றில் நடந்த விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அரசியல் விமர்சகர்கள் திடீரென தாக்கிக்கொண்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள பிரபல தொலைக்காட்சியில் விவாத நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இதில் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி சார்பில் இம்ரான்கானின் சட்டத்தரணி ஷெர் அப்சல் கான் மார்வாட், பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சி சார்பில் அப்னான் உல்லா கான் என முக்கிய கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்ச்சி தொடங்கி நேரலையில் ஒளிபரப்பானது. அப்போது முன்னாள் பிரதமர் இம்ரான்கானை யூதர்களின் முகவர் என உல்லா கான் விமர்சித்தார். இதனால், அப்சல்கானுக்கும் அவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த வாக்குவாதம் முற்றியதால் திடீரென அப்சல்கான் எழுந்துபோய் உல்லாகானை சரமாரியாகத் தாக்கினார்.

இதனையடுத்துநிகழ்ச்சிஏற்பாட்டாளர்கள் ஓடிச்சென்று அவர்களை சமாதானப்படுத்தினர். இதுகுறித்த காட்சிகள் அங்குள்ள சமூகவலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

மனவளக்கலை

**sky Yoga**

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும்
**sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள்**
**(Sky Yoga Foundation Course )**



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
**sky Yoga Center**
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607



நடிகர் திலகம் - நூற்றாண்டு விழா அமைப்புக்குழு, கனடா

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் 'மாற்று நாடக இயக்கம்' சென்னை 'யா-கார் தியேட்டர்' நாடகக்குழு

Yaa-Kar Theatre

இணைந்து நடத்தும்

இணையவழிக் கருத்தரங்கம்

'கனடா' மூர்த்தி, ஆவணப்பட இயக்குநர், கலை இலக்கிய ஆர்வலர், கனடா

செல்வி சி.பா.ஆதிரை நஸ்ரீன், பள்ளி மாணவி, திருப்பத்தூர்

திருமிகு ரஷ்யா தங்கப்பன், நடிகர் திலகத்தின் குடும்பத்தினர்

பேராசிரியர் பாலசுகுமார், இயக்குனர், சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவனம்

திருமிகு 'முக்தா' ரவி, திரைக்கலைஞர், சென்னை

சிறப்புரை : திரைக்கலைஞர் ம.நாசர்

திருமிகு 'யா-கார்' சு.வேலாயுதம், நாடகவியலாளர், சென்னை

முனைவர் கி.பார்த்திபராஜா, பேராசிரியர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்

அனைவரும் வருக!





நடிகர் திலகம்
சிவாஜிகணேசன் அவர்களின்
95 வது
பிறந்த நாள் விழா

அக்டோபர் 1, 2023 (ஞாயிற்றுக்கிழமை)

இந்திய நேரம் மாலை 6:00 மணி முதல் 8:00 மணி வரை

zoom Meeting ID : 842 5407 2088 Passcode : 304876

# 10 வகையான பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி, விநியோகம், பாவனைக்குத் தடை



இன்று ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், பத்து வகையான பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய முள்கரண்டிகள், குழாய்கள், பிளாஸ்டிக் மாலைகள், பிளாஸ்டிக் இடியப்ப தட்டுகள் மற்றும் உணவுக் கொள்கலன்கள் என்பன தடை விதிக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களில் உள்ளடங்குகின்றன.

பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பனவற்றை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தத் தடைகளை மீறி பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்யும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கழிவு முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என அவர் கூறினார்.

# இணையக் காப்புச் சட்டமூலம் சுதந்திரங்கள் மீதான தாக்குதல்

## சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் தெரிவிப்பு




இலங்கையில் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச இணையக் காப்புச் சட்டமூலமானது கருத்து வெளியிடுதல், தகவல் அறியும் சுதந்திரங்கள் மீதான தாக்குதல் என சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் பகிரப்படும் வெறுப்பூட்டும் பேச்சுகள் மற்றும் தவறான பதிவுகளை கட்டுப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்ற போதிலும், இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தில் ஆழமான குறைபாடுகள் காணப்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கருத்துச் சுதந்திரத்தை நிலைநாட்டுவதில் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக தவறி வரும் சூழலில், இவ்வாறானதொரு சட்டமூலம் தவறான முறையில் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்புகளை கொண்டிருக்கிறது என சங்கம் கூறியுள்ளது.

அரசாங்கத்தின் நடத்தை மற்றும் கொள்கைகள் தொடர்பான மக்களின் விவாதத்தை நசுக்குவதற்கு இந்த சட்டமூலம் பயன்படுத்தப்படும் அபாயம் இருக்கிறது என்றும் சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# பெரஹரா ஊர்வலத்துக்குச் சென்ற சீதா யானை மீது துப்பாக்கிச் சூடு!

## வன ஜீவராசிகள் அதிகாரி ஒருவர் கைது



மஹியங்கனை ரஜமஹா விகாரையில் இடம்பெற்ற பெரஹரா ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக சென்ற மஹா ரகம சீதா யானை மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

47 வயதான சீதா யானை ஊர்வலத்தில் பங்கேற்ற பின்னர் விஹாரையின் மைதானத்தில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த யானை மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

வனவிலங்கு அதிகாரி ஒருவரால் யானை மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன என வனவிலங்கு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சு மட்டத்திலான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் கூறியுள்ளார்.

காட்டு யானை என தவறாகக் கருதி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகப்படுகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் குறித்து வன விலங்கு பாதுகாப்புத் துறை இயக்குநர் தெரிவிக்கையில் –

'சீதா' என்ற பெண் யானை மீது வன ஜீவராசிகள் அதிகாரி ஒருவர் தவறுதலாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

காட்டு யானைகளை விரட்டும் நோக்கில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரியைக் கைது செய்துள்ளோம். – என்றார்.

காயமடைந்த யானைக்கு வனவிலங்கு பாதுகாப்புத் துறையின் கால்நடை வைத்தியர்கள் சிகிச்சையளித்து வருவதாக குறித்த அறிக்கையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது

# நீதித்துறையின் சுதந்திரத்தைக் காக்கும் தனது கடமையைத் தவறியுள்ளது அரசு!

## நீதியரசர் விக்னேஸ்வரன் காட்டம்



- என்.புவியரசன் -

யாழ்ப்பாணம், ஒக்.01

நீதித்துறைக்கு பங்கம் ஏற்படும் விதத்திலோ அல்லது நீதியை நடைமுறைப்படுத்தும் நீதித்துறை அதிகாரிக்குப் பங்கம் ஏற்படும் விதத்திலோ யாராவது நடந்து கொண்டால் உடனடியாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிபதிக்கு தொல்லைகள் கொடுக்கக் கூடாது. – எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா விவகாரம் தொடர்பில் யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நீதித்துறையை சுதந்திரமாக செயற்பட வைக்க வேண்டும் என்பது ஓர் அரசாங்கத்தினுடைய கடமையாக காணப்படுகின்றது. அதில் எந்த விதமான மாற்றுக்கருத்துக்கும் இடம் இருக்க முடியாது.

ஆனால் இலங்கையில் நடைபெறுவது இவ்வாறான செயற்பாடுகள் அல்ல. எல்லாமே ஒரு சிங்கள – பௌத்த சிந்தனையில் மட்டுமே நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

ஒரு தமிழருக்கு சார்பாக ஒரு தமிழ் நீதிபதி தீர்ப்பு கொடுத்தால் – ஒரு முஸ்லிமிற்கு சார்பாக ஒரு முஸ்லிம் நீதிபதி தீர்ப்புக் கொடுத்தால் சிங்களவர்கள் ஏதோ அவர்கள் தமிழர்களாக அல்லது முஸ்லிம்களாக இருப்பதால்தான் இவ்வாறு தீர்ப்பு கொடுத்திருக்கின்றார்கள் என்று கூறுகின்றார்களே தவிர, சிங்கள நீதிபதிகள் சிங்களவர்களுக்கு சார்பாக நீதி கொடுக்கின்றார்கள் என்று சிந்திப்பதில்லை.

இதில் நான் தெரிவிப்பது நீதிபதிகள் சட்டத்தின்படி நடக்கத்தான் அவர்களிற்கு நாங்கள் பயிற்சி கொடுத்திருக்கின்றோம். அவர்கள் இவ்வாறு தான் செய்கின்றார்களே தவிர, அதில் தமிழர்,சிங்களவர் என்று பாகுபாடு பார்த்து அவர்கள் இதனைச் செய்யவில்லை. இவ்வாறு நினைப்பது பிழையான ஒரு சிந்தனையாகும்.

இந்த சிந்தனையில்தான் இவ்வாறு இந்த நீதிபதிக்கு நடந்திருக்கின்றது என்பது தெரிகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒன்றில் அவரை திரும்ப வரவழைத்து போதிய பாதுகாப்பு கொடுத்து அவரை மீண்டும் அதே பதவியை வகிக்க செய்யலாம். இது நடைமுறைக்கு சாத்தியமானதாக இருக்கின்றதா என்பது தெரியவில்லை.

ஆனால் அரசாங்கம் ஒன்றைக் கவனத்தில் எடுக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்தாவிட்டால் இது சிங்கள மக்களிக்குமிடையே இது மாதிரியான நிலைமைகள் ஏற்பட்டு பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

ஈஸ்டர் தாக்குதல் முஸ்லிம்களால் நடத்தப்பட்டதாகக் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் அவ்வாறு அல்ல. இது யாரோ ஒருவரின் அரசியலுக்காக இது ஒரு நாடகமாக நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதே இங்கு பிரதானமாகும்.

அனைத்தையும் தீர விசாரித்து செயற்பட வேண்டும் என்பதே எனது பிரதான கருத்தாகும்.– என்றார்.

# உடனடியாகத் தேர்தலை நடத்த ரணிலுக்கு அழுத்தம் கொடுக்குமாம் பொதுஜன பெரமுன

## அதன் பொருளாளர் ரஞ்சித் பண்டாா எம்.பி. கூறுகின்றார்




நாட்டை ஸ்திரப்படுத்துவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது.

ஆகவே அரசாங்கம் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்த அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என பொதுஜன பெரமுனவின் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:–

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை 2019 ஆம் ஆண்டு தோற்றுவித்தார்கள். எமது ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ எடுத்த தவறான தீர்மானங்களினால் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டமையால் அரசியல் ரீதியில் நெருக்கடிகள் தோற்றம் பெற்று பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. பொருளாதாரப் பாதிப்பைக் கொண்டு ஒரு தரப்பினர் நாட்டை பலவீனப்படுத்த முயற்சித்தார்கள்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறைக்கு சாத்தியமான எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் தெரிவு செய்துள்ளோம் என்பதற்காக அவர் எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் எம்மால் இணக்கம் தெரிவிக்க முடியாது. தவறான தீர்மானங்களுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது. அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது.

நாடு தற்போது ஸ்திரமடைந்துள்ளது. ஆகவே அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். பொருளாதாரப் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது. மக்கள் ஆணையைத் தெரிந்துகொள்ள அரசாங்கம் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்துமாறு அரச தலைவர்களுக்கு அழுத்தம் பிரயோகிப்போம். – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.10.2023




இன்றைய தினம் மகிழ்ச்சி நிறைந்த தருணங்களைக் கொண்டதாக இருக்கும். உங்கள் நேர்மையான முயற்சி மூலம் நீங்கள் பல ஆச்சரியங்களைப் புரிவீர்கள். ஆன்மீக காரியங்கள் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

பணிச்சூழல் சாதகமான பலன்களைக் கொடுக்கும். பணிகளைப் பொறுத்தவரை நீங்கள் திட்டமிட்டபடி நடக்கும்.அதனால் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் மனதில் மிகுந்த திருப்தி காணப்படும். உங்கள் துணையுடன் சாதாரணமான அணுகுமுறை கடைபிடிப்பீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். இருக்கும் பணத்தை பங்குகளில் முதலீடு செய்து பயனடையலாம்.

ஆரோக்கியப் பிரச்சினைகளிலிருந்து விடுதலை அடைவீர்கள்.




இன்று முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகள் மற்றும் செயல் திறன்களை வெளி உலகிற்கு வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பெறுவீர்கள். இன்றைய தினம் மிகுந்த தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. உங்கள் திறமைகள் வெளிப்படும். உங்கள் பணிகள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மையுடன் காணப்படுவீர்கள். இருவரும் ஒன்றாக நேரத்தை நல்ல முறையில் கழிப்பீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். இன்று சேமிக்கவும் செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

உங்கள் தைரியம் மற்றும் திருப்தியான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று மிகுந்த செயல்பாடுகள் காணப்படாது. சவாலான நேரங்களில் பதட்டப்பட நேரிடும் என்பதால் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி பற்றிய கவலை இருக்கும்.

பணிச்சூழலில் ஸ்திரத்தன்மை காணப்படாது. இதனால் உங்கள் பணிகளை திறமையுடன் கையாள முடியாது. சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படையாக கூற இயலாது. உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பதற்கான உற்சாகமான மனநிலை உங்களிடம் காணப்படாது. தேவையற்ற மனஉளைச்சல்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

பணத்தட்டுப்பாடு காணப்படும்.




இன்று உறுதியான முடிவுகள் கிடைப்பதற்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரிடலாம். அது உங்களுக்கு கவலையைத் தரும். அமைதியுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

கடுமையான பணிச்சுமை சவாலாக இருக்கும்.அத்தகைய சூழ்நிலைகளை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.அதிக வேலை காரணமாக களைத்துப் போவீர்கள்.

உங்கள் துணையுடன் எளிதான அணுகுமுறை தேவை. உங்களுக்கும் உங்கள் துணையாருக்கும் இடையே பிளவு இருப்பதாக நீங்கள் உணர்வீர்கள்.எனினும் நெருக்கமான பிணைப்பை வளர்ப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பண இழப்பிற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.




இன்று சுமூகமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் தொடங்கும் காரியங்களில் வெற்றி பெறுவதற்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் பணிகளை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே முடித்துவிடுவீர்கள்.அதனால் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மை மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்துவீர்கள். இதனால் மகிழ்ச்சியும் நல்ல புரிந்துணர்வும் ஏற்படும்.

பணவளர்ச்சிகாணப்படுகின்றது. பாதுகாப்பான வளமான நிலை மகிழ்ச்சியை அளிக்கும்.

மனதில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும்.உங்களிடம் காணப்படும் உயர்ந்த ஆற்றல் மற்றும் தன்னம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் செயல்கள் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். இன்று பிரகாசமான நாள்.

உங்கள் செயல்பாட்டிற்காக மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். செய்வதற்கு அரிதான பணிகளையும் நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் ஆழ்ந்த ஒட்டுதலை உண்டாக்கிக் கொள்வீர்கள். உங்கள் துணையாரும் நேர்மையுடன் நடந்து கொள்வார்.நல்லிணக்கத்தை வளர்க்கும் வகையில் நீங்கள் உங்கள் துணையுடன் ஒரு முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

உங்களுக்கு பயனளிக்கத்தக்க முதலீடுகளை செய்வதற்கு இன்று உகந்த நாள்.




இன்று உங்கள் செயல்களை முறையாக திட்டமிட்டு செய்வதன் மூலம் நற்பலன்களைக் காணலாம். இன்று தவறான முடிவுகள் எடுப்பதற்கு வாய்ப்புள்ள காரணத்தால் எந்தவொரு முடிவையும் யோசித்து எடுங்கள். பெரியவர்களிடம் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது.

பணிநிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்களுக்கு இடப்பட்ட பணிகளை குறித்த நேரத்திற்குள் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் உணர்ச்சிப்பூர்வமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். இன்று சேமிப்பதற்கான வாய்ப்புகள் குறைவு.

பற்களில் வலி வருவதற்கு வாய்ப்புள்ளதால் அதில் கவனம் செலுத்தி மருத்துவம் செய்து கொள்ள வேண்டும்.




இன்றைய தினம் உறுதியான பலன்கள் கிடைக்காது.அசாதாரணமான சூழ்நிலையை தவிர்க்க நீங்கள் கவனமுடன் இருக்க வேண்டும். நீங்கள் பேசும் பொழுது உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.

திறமையாக பணியாற்றுவதற்கு தடைகள் காணப்படும். சகபணியாளர்களுடன் சுமூகமான உறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக இருக்கவும்.

இன்று தவிர்க்கமுடியாத செலவினங்கள் காணப்படுகிறது. எனவே உங்கள் செலவினங்களை கட்டுப்படுத்துவது நல்லது. தேவையற்ற செலவினங்களும் ஏற்படலாம்.

முதுகுவலிவருவதற்கானவாய்ப்புஉள்ளது.கண்களுக்கு மருத்துவம் மேற்கொள்வது நல்லது. வேலையின் காரணமாக நீங்கள் களைத்துப் போவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.10.2023




இன்று சாதகமான நாளாக அமையும். நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் எளிதாக வெற்றி அடைவீர்கள்.பெரியவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

பணியில் உங்கள் நிலையில் வளர்ச்சி காணப்படும். வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். அவை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளும் உங்களுக்கு சாதகமாக இருப்பார்கள்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு முக்கியமான விழா தொடர்பாக உங்கள் துணையுடன் பயனுள்ள விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

திடமான தேக ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உற்சாகமும் ஆற்றலும் நிறைந்து காணப்படும். எனவே இன்றைய நாளை நீங்கள் சிறப்பாகத் திட்டமிடலாம். உங்கள் திட்டங்களை செயறலாற்றத் தொடங்குவதற்கு இன்று மிகச் சரியான நாள்.

உங்கள் தொழில் சம்பந்தமான பயணம் காணப்படும். உங்கள் தகவல் பரிமாற்றத் திறமை காரணமாக நீங்கள் பாராட்டு பெறுவீர்கள். உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

இன்று உறவு நிலை சாதாரணமாக காணப்படும். உங்கள் துணையுடன் வெளிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. பயனுள்ள சிறு சிறு செலவுகளை மேற்கொள்வீர்கள். அழகுப் பராமரிப்பு, மருந்து வாங்குதல் போன்றவற்றிற்கு செலவு செயவீர்கள்.




இன்று அதிக சிந்தனைவயப்பட்டவர்களாக இருப்பீர்கள். விஷயங்களை சாதாரணமாக எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும். தியானம் மேற்கொள்ளுங்கள். அது உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

பணிநிமித்தமான பயணங்கள் காணப்படும்.பணியில் நிறைய சவால்களை சந்திக்க நேரும்.கடுமையான வேலை காரணமாக சோர்ந்து காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடனான தொடர்பாடலின் பொழுது பிரச்சனைகள் ஏற்படலாம். இதற்கு உங்கள் அகந்தை போக்கு காரணமாக இருக்கலாம்.எனவே, அத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

பண அதிர்ஷ்டம் இன்று பிரகாசமாக இல்லை. தொலை தூரப் பிரதேசத்திலிருந்து நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பணம் கிடைக்க தாமதமாகலாம்.




இன்று மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிறைந்து காணப்படும். நிலுவையிலுள்ள பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள். இன்று ஆன்மீக அனுபவங்களைக் கண்டு மகிழலாம்.

உங்கள் பணி சிறப்பாக இருக்கும் உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் அமைதிகரமாக இருக்கும் எளிதாகப் பணியாற்ற முடியும்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தைக் கழிப்பீர்கள். அவர்களின் அன்பும் ஆதரவும் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.என்றாலும் இனிமையற்ற வார்த்தைகளைப் பேசாதீர்கள்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். உங்கள் குடும்பத்திற்கென பணம் செலவு செய்வீர்கள். இன்று கவனமாக பணம் செலவு செய்ய வேண்டும்.




